1979 பிப்ரவரி 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதிகோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவுற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(4) அரசினர் தீர்மானம்.

வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 18-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் 'வகை-2 பிற உறுப்பினர்கள்' என்ற தலைப்பின்கீழ் (எச்) பகுதிக்கிணங்க, மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் ஒரு நாளன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாக வாரியத்தின் பதவிக் காலம் முடிவடைந்ததன் காரணமாக, அதில் உறுப்பினராக இருந்த திரு. ஏ எம். பரமசிவன் அவர்களின் பதவிக்காலம் முடிவடைவதால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஓர் உறுப்பினரை இப்பேரவை தேர்ந்தெடுக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(1) அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு வேளாண்மைத் துறை மற்றும் நீர்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு ஒரு உறுப்பினரைத்